தமிழ் இலக்கியங்களில்
இந்திய அறிவு மரபு



பதிப்பாசிரியர்

முனைவர் க. கலாகோபி

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் பொன். சண்முகம்

முனைவர் பா. விக்னேஷ்குமார்

பதிப்பாண்டு : மே 2026

தமிழ் இலக்கியங்களில் இந்திய அறிவு மரபு

பதிப்பாசிரியர் : முனைவர் க.கலாகோபி

தொகுப்பாசிரியர் : முனைவர் பொன்.சண்முகம்
முனைவர் பா.விக்னேஷ்குமார்

* பக்கம் : 256
* அளவு : டெம்மி, 12.5 புள்ளி
* தாள் : என்.எஸ்.புக் பிரிண்ட்
* அச்சு : வசந்தம் அச்சகம், சென்னை.
* நூல் வடிவமைப்பு : ரேகா
* அட்டை வடிவமைப்பு : கா.பாத்திமா

வெளியீடு
அகில் பதிப்பகம்
நெ. 44/2, நாயக்கமார் தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை- 33.

ISBN : 978-81-69145-89-3

விலை : ரூ. 300 /-

பொருளடக்கம்

1. காஞ்சீபுரம் மாவட்ட வேளாண்மைச் சடங்குகளில் வளமை நம்பிக்கைகளும் சமூக விழிப்புணர்வும்
   முனைவர் **பொன். சண்முகம்**

2. கலித்தொகைப் புலவர்களின் இயற்கை நுண்ணறிவுத் திறன்
   முனைவர் **கு.சு. செந்தில்**

3. பழந்தமிழர்களின் மெய்யியல் அறிவு மரபு
   முனைவர் **நா தீபாராணி**

4. மானுட வளர்ச்சியில் அட்டாங்க யோகம்
   முனைவர் **சீ.வெண்ணிலா**

5. தமிழ் இலக்கியங்களில் வானியல் மரபு
   க.புவனேஸ்வரி

6. நவிர மலைவாழ் மக்களின் தொன்மையான கல்வி முறைகள்
   வெ. நந்தகுமார்

7. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் உளவியல்
   அ. இன்பரசு

8. சங்க இலக்கியக் குறிஞ்சித்திணைக் கவிதைகளில் கலைகளின் வெளிப்பாடு
   முனைவர் **மு.சாங்கர்**

9. சங்க இலக்கியங்களும் சகுனங்களும்
   முனைவர் **தி.சுதா**

பழந்தமிழர்களின் மெய்யியல் அறிவு மரபு

முனைவர் நா தீபாராணி
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை.
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப மற்றும் உயர் ஆராய்ச்சி நிறுவனம்.
பல்லாவரம், சென்னை.

முன்னுரை

பழந்தமிழர்களின் வாழ்வில் பல உண்மைகள் நிறைந்துள்ளன. உண்மையான ஒன்றினைத் தெளிவாக உணர்ந்துகொள்ள பிறரிடம் கற்றுக் கொண்டதைத் தம் வாழ்வில் பயன்படுத்தி தெளிவடைய முடியும். நிகழ்வுகளை முழுமையாக ஆராய்ந்தப் பழந்தமிழர்கள் பொய்மையை நீக்கி மெய்மையை நிலை நிறுத்தியுள்ளனர் என்பதை தமிழ்ச் செவ்வியல் பனுவல்கள் வழி அறியமுடிகிறது.

இன்றைய நவீன கால வாழ்வில் உண்மையைப் புரிந்து கொள்ளும் அளவிற்குப் பொறுமை இல்லை. பொறுமை இல்லாத நிலையில் வாழ்க்கையும் பொய்யானதாக அமைகிறது. அதனால் பின்வரும் தலைமுறைக்கும் தேவையான மெய்யியல் தன்மை பற்றி அறியமுடியாத நிலை ஏற்படுகிறது.

தாங்கள் செய்வது தவறு என்று கூறும்போது அதனை ஏற்று உண்மையை அறிந்துகொள்ள விரும்பாத சமூகமாக மாறிவருகிறது. இந்நிலை நீடித்தால் பொய்யான வாழ்க்கை முறையில் மட்டுமே வாழும் சூழல் ஏற்படும். இந்நிலை மாற பழந்தமிழர்கள் மேற்கொண்ட மெய்யியல் அறிவு துணைசெய்யும் என்பதை இவ்வியலில் காண்போம்.

மெய்யியல் விளக்கம்

மெய்யியல் என்பது எல்லா நிலையிலும் ஊடுருவியிருக்கும் உண்மையாகும். இதனை மெய்யியல், மெய்பொருளியல்,

பொருளாம், உண்மைநிலை என்றெல்லாம் அ...
படுகின்றன.

மனித வாழ்வில் ஏற்படும் கருப்பொருளின் உ... தன்மையை ஆராய்வதும் மெய்யியலாகும் வடமொழியில் மெ... என்பதைத் 'தத்துவம்' என்ற சொல்லினால் குறிக்கி... தத்துவம் என்பதற்கு பொருள் கொள்ளும் போது உ... குறித்தான முயற்சி அல்லது அறிவு என்று பொருள்படு...

ஆங்கிலத்தில் மெய்யியல் என்பதை Philoshophy ... குறிப்பிடப்படுகிறது. இதனை கிரேக்கத்தில் Philo Sophia ... இரண்டு

சொற்களிலிருந்து பெறப்பட்டதாகக் கருதப்படுகி... இதனைப் "பொருள் அறிவின் பால் காதல் அல்லது அ... பால் ஈர்க்கப்படுதல்" என்று பொருள் கொள்ளப்படுகின்...

மெய்யியல் என்பது அறிவு சார்ந்த தேடல்கள். ... என்பது அறிவியல், அறம், இயற்கை, சமயம், மொழி, பண்பாடு... நாகரிகம் என எல்லாவற்றின் உண்மை நிலையை அறிவ... பழந்தமிழர்கள் மெய்யியல் என்பதனை புறத்திலிருந்து பார்க்... அதன் உள்ளிருந்து பார்க்கும் அறிவு மரபை கொண்டுள்ள...

வெண்மையாக இருப்பது எல்லாமே பால் என்று எ... கருத்தை உண்டு வாழ்கின்ற மனிதர்களை விட, நாம் ... பார்க்கிறோம், பார்த்தவற்றிலிருந்து எதைப் புரிந்து கொள்கி... புரிந்து கொண்டதில் என்ன உணர்கிறோம். உணர்ந்... பழந்தமிழர்கள். siran கொள்கை, உண்மையை அறிந்திருந்த...

இந்நிலையில் மெய்யியல் என்பது துறைக்கு ம... சொந்தமானதும் இல்லை. ஒவ்வொரு துறைக்கும் ஒரு ... மெய்யியல் உண்டு. அவை எல்லா நிலைகளிலும் ஊடு... பொதிந்திருக்கும். இதனை ஞானிகள் மெய்ப்பொருள் எ... விஞ்ஞானிகள் அறிவியல் என்றும் கூறினர்.

அறிவினால் ஆராயும் அறிவுசார்ந்த ஆராய்ச்... மெய்யியல் என்று இருவரும் குறி...

பழந்தமிழர்கள் வாழ்வில் கண்ட மெய்யியல் கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு வகைமைப்படுத்தி ஆராயப்பட்டுள்ளன.

பழந்தமிழர்கள் கண்ட மெய்யியல் அறிவு
பழந்தமிழர்களும் மெய்யியல் அறிவும்
உலகளாவிய மெய்யியல் அறிவு
பொதுநிலை மெய்யியல்
நல்லிணக்கத்தில் மெய்யியல்

நற்கால சமூக நல்லிணக்கம் என்பனவாகும். இவ்வாய்வு கட்டுரையில் மேற்குறிப்பிட்டவற்றில் இரண்டு மட்டுமே விரிவாக காணப்படுகின்றது

பழந்தமிழர்களும் மெய்யியல் அறிவும்

பழந்தமிழர்கள் தனிமனிதனைத் திருத்தி, சமூகத்தில் உலவச் செய்வது மெய்யியல் அறிவாகக் கொண்டுள்ளார்கள். தனிமனிதன் உண்மையை உணர்ந்துவிட்டால் குடும்பமும் குடும்பங்கள் இணைந்த தெருவும், தெருக்கள் இணைந்த வாரும், உலகமும் மெய்யியல் அறிவை பெற்றுவிடும் என்று நம்பினார்கள்

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" குறள் 423

என்ற குறள் பழந்தமிழர்கள் மெய்யியல் அறிவு கொண்ட வாழ்வியலை மேற்கொண்டனர் என்பதை உணர்த்துவதாக உள்ளதை அறியமுடிகிறது.

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" குறள் 555

என்ற குறள் மூலம் ஒரு பொருளின் உண்மை நிலையை ஆராய்ந்து அதன் விளைவு பற்றி அறிந்தவர்கள் பழந்தமிழர்கள் என்பதை அறியமுடிகிறது. குடிப்பிறப்பு

உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் பொதுவானவை என்ற மெய்மையை 'பிறப்பு ஒக்கும்' என்று வள்ளுவர் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளதை அறியமுடிகிறது. இதனை,

"பிறப்பொக்கும் எல்லா உயிருக்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" குறள் 972

என்ற குறள் மெய்யியல் அறிவு பற்றி உணர்த்தும் கருத்து முதன்மையானதாக உள்ளதை வெளிப்படுத்துகிறது.

"அந்தார் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்"குறள் 30

பிறப்பில் உயர்வு தாழ்வு கொண்டு பொய்யான எண்ண கொண்டவர்களுக்கு அந்தணர் என்று இன்றைய கா பொருள் உள்ளதை

புறம் கூறிப்பொய்யான வாழ்வை வாழ்வதைவிட போதல் நலம் தரும் என்பதை.

"புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்"நாலடி, தாளாண்மை.

என்ற குறள் பொய்யான பண்புகளை விடுத்து மெ பண்புகளை வளர்த்துக் கொள்ளவேண்டும். அதுவே மன உண்மையான மெய்யியல் அறிவாகும் என் தெளிவுப்படுத்துகிறது.

உண்மைச் செயல்கள்

மூடநம்பிக்கைகள், தனிமனிதனை மட்டுமல் சமுதாயத்தையும் செல்லரிக்கச் செய்துவிடும். ஆனால் மனிதனு அறிவார்ந்த முயற்சிகளும் உழைப்பும் எல்லாச் செயல்க மேன்மையடையச் செய்யும். விதி, வினைப்பயன், பாவம் முடங்கிவிடாது அறிவு மூலம் தீர்வுகாண வேண்டும் கூறியுள்ளனர். இதனை,

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

"வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு." குறள் 612

என்ற குறள் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்

ஒரு மனிதனின் உடல் ஊனம் ஒரு பெரிய குறையல்ல. அறிவு (மெய்) ஊனமே மிகப் பெரிய குறை என்பதை அறிவுறுத்தியுள்ளனர்.

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும்
உருள்பெருந்தோர்க்கு அச்சாணி அன்னார்
உடைத்து"குறள் 667

என்பதில் வெற்றிக்கு உருவம் தடையல்ல என்று வள்ளுவர் உரைத்துள்ளார்.

மேலும் அறிவு கொண்டவனால் நினைத்தவற்றை நினைத்தவாறே சாதிக்க முடியும் என்பதனை,

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப் பெறின்"குறள் 666என்ற குறன் மூலம் உணர்த்தியுள்ளனர்.

நாகரீகம் மாறலாம் ஆனால் பண்பாடு மாறக்கூடாது. அது சமூகத்தைச் சீரழித்துவிடும் என்ற மெய்யியல் அறிவு தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்கள் முழுவதும் பரவியுள்ளதை அறிய முடிகிறது. இவ்விலக்கியம் மனிதனுடைய அறிவுசார்ந்த செயலை கூர்ந்து நோக்கி படைக்கப்பட்டது என்பதை உணரமுடிகிறது.

பழந்தமிழர்கள் மெய்யியல் அறிவு மூலம் ஏற்பனவற்றை ஏற்றும், மாற்ற வேண்டியவற்றை மாற்றியும், முற்றிலும் தள்ள வேண்டியவற்றை புறந்தள்ளியும், மறுக்க வேண்டியதை மறுத்தும், உண்மை சமூகத்தை முறைப்படுத்தியுள்ளனர்.

"வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை"ஆசாரக்.4

என்ற பாடல் மூலம் எந்த ஒரு செயலையும் துவங்கும்முன் பெரியோரை வழிபடுதல் வேண்டும். உடலும் உள்ளமும் எப்போதும் இணைந்திருக்கும். தனிமனித ஒழுக்கம் ஒரு சமூகத்தின் ஒழுக்கம். ஒருவன் தான் செய்யவேண்டிய செயல்களைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் போது அவனுக்கு உடலானது

துணை நூற்பட்டியல்

1. திருக்குறள்முழுவதும், மணிவாசகர் பதிப்பகம் சென்னை

2 .நான்மணிக்கடிகைஉரை பூலியூர்கேசிகன், மணிவாசகர் பதிப்பகம் சென்னை

3. பழமொழி நானூறு, பூலியூர்கேசிகன் மணிவாசகர் பதிப்பகம் சென்னை.

4. ஆசாரக்கோவை, பூலியூர்கேசிகன், மணிவாசகர் பதிப்பகம் சென்னை.